சுருக்கம்

மதுரை மாநகராட்சி– திரு கே.சக்திவேல், நகரப் பொறியாளர் (கண்காணிப்புப் பொறியாளர் நிலை) மதுரை மாநகராட்சி– தலைமைப் பொறியாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட பணியிடத்தில் நியமித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

= = = = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை

அரசாணை (3டி) எண்.2 நாள் 23.1.2009

திருவள்ளுவர் ஆண்டு 2040,
தைத் திங்கள், 10ம் நாள்

படிக்க

1. அரசாணை (2டி) எண்.105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறை, நாள் 26–06–2007
2. ஆணையாளர், மதுரை மாநகராட்சி கடிதம் எண்.மநி1/18107/2006/எம்சி2, நாள் 24–07–07
3. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித ந.க.எண். 45215/2007/எப்4 நாள் 18.02.2008.
4. ஆணையாளர், மதுரை மாநகராட்சி கடிதம் எண்.மநி1/18107/2006, நாள் 08–12–08
5. அரசாணை (3டி) எண்.1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை, நாள் 12–01–2009
6. அரசு கடித எண்.6108/மாந4/2008–6 நாள் 23–1–2009

ஆணை

பார்வை 5ல் படிக்கப்பட்ட அரசாணையில் தற்போது கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் உள்ள நகரப் பொறியாளர் பணியிடத்தினை தலைமைப் பொறியாளர் பணியிடமாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது. பார்வை 6–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்படி அரசாணைக்கு சில திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

2. மதுரை மாநகராட்சி மாமன்றம் 24–10–2007 நாளிட்ட தீர்மான எண்.335–ல் தற்போது மதுரை மாநகராட்சியில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் பணியிடத்தை தலைமைப் பொறியாளர் பணியிடத்திற்கு உயர்த்தியும், கண்காணிப்புப் பொறியாளராக பணிபுரியும் திரு கே.சக்திவேல் அவர்களை தலைமைப் பொறியாளராக பதவி உயர்வு செய்யவும் அரசிற்கு பிரேரணை அனுப்ப தீர்மானித்தது. மீண்டும், 18–07–2007 நாளிட்ட தீர்மான எண்.96–ல் மதுரை மாநகராட்சியில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் பணியிடத்தை தலைமைப் பொறியாளர் பணியிடத்திற்கு உயர்த்த அரசின் ஆணை பெற தீர்மானித்தது.

த.பி.பா.,

3. மேற்படி தீர்மானங்களின் அடிப்படையில் பெறப்பட்ட மதுரை மாநகராட்சி ஆணையரின் செயற்குறிப்புகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் பரிந்துரை ஆகியவற்றை அரசு விரிவாகவும், கவனமுடன் பரிசீலித்த பின், திரு சக்திவேல் அவர்கள், சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நீதிப்பேராணை மனு எண்கள்.26430/2008, 26431/2008, 26432/2008 மற்றும் 26433/2008 ஆகியவற்றில், உயர்நீதிமன்றம் வழங்கும் இறுதி தீர்ப்பிற்குட்பட்டு, அவரை தலைமைப் பொறியாளராக பதவி உயர்வளித்து, பார்வை 5ல் தலைமைப் பொறியாளர் நிலைக்கு, நிலை உயர்த்தப்பட்ட நகரப் பொறியாளர் பணியிடத்தில் இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் பணி நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5
ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை-108
நகல்
நிதித் (நநிமகு) துறை, சென்னை-9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் தனிச் செயலர், சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப-3/அந-2) துறை, சென்னை-9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

23-01-09